# 7th Science Lesson 2 Questions in Tamil

## 2] விசையும் இயக்கமும்

1) ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பொருள் கடந்து வந்த பாதையின் மொத்த நீளம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) இடப்பெயர்ச்சி

**B) தொலைவு**

C) திசைவேகம்

D) வேகம்

**விளக்கம்: ஒரு பொருள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கடந்து வந்த பாதையின் மொத்த நீளம் தொலைவு என வரையறுக்கப்படுகிறது. இது பாதையின் மொத்த நீளத்தை குறிக்கிறது.**

2) SI அலகான மீட்டர் என்பது எதனுடைய அலகு ஆகும்?

A) தொலைவு

B) இடப்பெயர்ச்சி

C) வேகம்

**D) A&B**

**விளக்கம்: SI அலகான மீட்டர் என்பது தொலைவு மற்றும் இடப்பெயர்ச்சி ஆகிய இரண்டிற்கும் குறிக்கப்படுகிறது. இவை இரண்டும் நீளத்திற்கான வரையறை ஆகும்.**

3) வான் மற்றும் கடல்வழி போக்குவரத்துகளில் தொலைவினை அளக்கப்பயன்படும் அலகு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

**A) நாட்**

B) கிலோ மீட்டர்

C) நாட்டிக்கல்

D) ஓடோ மீட்டர்

**விளக்கம்: வான் மற்றும் கடல்வழி போக்குவரத்துகளில் தொலைவினை அளக்க பயன்படுத்தப்படும் அலகு நாட் என அழைக்கப்படுகிறது. இது தூரத்தை அளக்க பயன்படுத்தப்படும் மற்றொரு அலகாகும்.**

4) கீழ்க்கண்டவற்றில் எது சீரான திசைவேகத்தில் இயங்குகிறது?

A) இரயில் நிலையத்திற்கு தொடர்வண்டி வந்து நிறுத்துதல்.

B) கால்பந்து மைதானத்தில் கால்பந்தின் இயக்கம்

**C) வெற்றிடத்தில் செல்லும் ஒளி**

D) எதுவுமில்லை

**விளக்கம்: வெற்றிடத்தில் பயணம் செய்யும் ஒளியாணது சீரான திசைவேகத்தில் இயங்குவதற்கான மிகச் சிறந்த சான்றாக விளங்குகிறது. மற்றவை அனைத்தும் சீரற்ற திசைவேகத்தையும் மற்றும் வேகத்தையும் மேற்கொள்கிறது.**

5) வேகம் மற்றும் திசைவேகம் இரண்டும் எத்தனை வகைப்படும்?

**A) 2, 2**

B) 3, 2

C) 6, 3

D) 8, 4

**விளக்கம்: வேகம் மற்றும் திசைவேகம் இரண்டும் இரண்டு வகைப்படும் அவையாவன வேகத்திற்கு**

**சீரான வேகம் மற்றும் சீரற்ற வேகம்**

**திசைவேகத்திற்கு**

**சீரான திசைவேகம் மற்றும் சீரற்ற திசைவேகம்**

6) சீரான திசைவேகத்தில் தெற்கு நோக்கி செல்லும் மகிழுந்து 100மீ தொலைவினை 4 வினாடிகளில் கடக்கிறது எனில் அதன் திசைவேகம் என்ன?

A) 20 மீ/நொடி

**B) 25 மீ/நொடி**

C) 28 மீ/நொடி

D) 30 மீ/நொடி

**விளக்கம்: சீரான திசைவேகத்தில் தெற்கு நோக்கி செல்லும் மகிழுந்து 100மீ தொலைவினை 4 வினாடிகளில் கடந்தால் அதன் திசைவேகம் 25 மீ/நொடி ஆக இருக்கும்**

**திசைவேகம் = இடப்பெயர்ச்சி/காலம்**

**= 100/4**

**= 25 மீ/நொடி**

7) ஒரு பொருளின் இயக்கத்தின் போது அதன் தொடக்க நிலைக்கும் இறுதி நிலைக்கும் இடைப்பட்ட மிகக் குறுகிய தொலைவு எவ்வாறு வரையறுக்கப்படுகிறது?

**A) இடப்பெயர்ச்சி**

B) தொலைவு

C) திசைவேகம்

D) வேகம்

**விளக்கம்: இடப்பெயர்ச்சிக்கான வரையறையாகும், இடப்பெயர்ச்சி என்பது ஒரு பொருளின் இயக்கத்தின் போது அதன் தொடக்க நிலைக்கும் இறுதி நிலைக்கும் இடைப்பட்ட மிகக் குறுகிய தொலைவு இடப்பெயர்சி எனப்படுகிறது.**

8) 1. தொலைவு – இரு புள்ளிகளுகிடைப்பட்ட தொலைவு

2. இடப்பெயர்சி – இடப்பெயர்ச்சி மாறும் வீதம்

3. வேகம் – திசைவேகம் மாறும் வீதம்

4. திசைவேகம் – தொலைவு மாறும் வீதம்

5. முடுக்கம் – பொருள் கடந்த தொலைவு

**A) 5 1 4 2 3**

B) 4 2 5 1 3

C) 2 5 4 3 1

D) 3 4 2 5 1

**விளக்கம்: தொலைவு – பொருள் கடந்த தொலைவு**

**இடப்பெயர்சி – இரு புள்ளிகளுகிடைப்பட்ட தொலைவு**

**வேகம் – தொலைவு மாறும் வீதம்**

**திசைவேகம் – இடப்பெயர்ச்சி மாறும் வீதம்**

**முடுக்கம் – திசைவேகம் மாறும் வீதம்**

9) சிறுத்தையானது 2 வினாடிகளில் எவ்வளவு முடுக்கம் பெறுகிறது?

A) 25 m/s

B) 30 m/s

**C) 20m/s**

D) 10m/s

**விளக்கம்: சிறுத்தையின் வேகமானது 25 m/s – 30 m/s ஆகும் இது 2 வினாடிகளில் 20 m/s முடுக்கத்தை அடைகிறது.**

10) ஒரு நாட்டிக்கல் மைல் என்பது எத்தனை கிலோ மீட்டர் ஆகும்?

A) 1 கிலோ மீட்டர்

B) 1.5 கிலோ மீட்டர்

**C) 1.852 கிலோ மீட்டர்**

D) 2 கிலோ மீட்டர்

**விளக்கம்: ஒரு நாட்டிக்கல் மைல் என்பது 1.852 கிலோ மீட்டர் ஆகும். இது திரவம் மற்றும் வான்வெளிப்பகுதியில் கணக்கிடப்படுவதால் கிலோ மீட்டர் அளவுகளில் மாறுபடுகிறது.**

11) ஒரு பொருளின் திசைவேகமானது காலத்தை பொறுத்து அதிகரித்துக்கொண்டே வந்தால் அது எவ்வகை முடுக்கமாக கருதப்படுகிறது?

A) சீரான முடுக்கம்

B) சீரற்ற முடுக்கம்

**C) நேர் முடுக்கம்**

D) எதிர் முடுக்கம்

**விளக்கம்: ஒரு பொருளின் திசைவேகமானது காலத்தை பொறுத்து அதிகரித்துக்கொண்டே வந்தால் அது நேர் முடுக்கம் என அழைக்கப்படுகிறது.**

12) ஒரு பொருளின் எடை முழுவதும் எப்புள்ளியில் செயல்படுவதுபோல் தோன்றுகிறதோ அப்புள்ளியானது அந்த பொருளின் ___________?

A) முடுக்கம்

B) எடை

**C) ஈர்ப்பு மையம்**

D) புவியீர்ப்பு மையம்

**விளக்கம்: எப்புள்ளியில் ஒரு பொருளின் எடை முழுவதும் செயல்படுவதுபோல் தோன்றுகிறதோ அப்புள்ளியானது அந்த பொருளின் ஈர்ப்பு மையம் என அழைக்கப்படுகிறது.**

13) சமநிலை எத்தனை வகைப்படும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: சமநிலையானது 3 வகைப்படும் அவையாவன உறுதிச்சமநிலை, உறுதியற்ற சமநிலை, நடுநிலைச்சமநிலை.**

14) ஒரு பொருளின் ஆரம்ப நிலையினை தக்க வைத்துக்கொள்ளும் திறன் அப்பொருளின்_________?

A) ஈர்ப்பு மையம்

B) நடுநிலை மையம்

**C) சமநிலை**

D) பொருளின் உறக்கம்

**விளக்கம்: ஒரு பொருளானது ஆரம்ப நிலையினை தக்க வைத்துக்கொள்ளும் திறனே அதன் சமநிலை என வரையறுக்கப்படுகிறது. சமநிலையானது 3 வகைப்படும்.**

15) 1. நேர் முடுக்கம் – காலத்தை பொருத்து திசைவேகம் குறைதல்

2. சீரற்ற முடுக்கம் – காலத்தை பொறுத்து ஏற்படும் மாற்றம் சீரற்றதாக இருத்தல்

3. எதிர் முடுக்கம் – காலத்தை பொறுத்து திசைவேகம் அதிகரித்தல்

4. சீரான முடுக்கம் – காலத்தை பொறுத்து ஏற்படும் மாற்றம் சீராக இருத்தல்

A) 1 2 4 3

B) 2 1 3 4

**C) 3 2 1 4**

D) 2 4 1 3

**விளக்கம்: நேர் முடுக்கம் – காலத்தை பொறுத்து திசைவேகம் அதிகரித்தல்**

**சீரற்ற முடுக்கம் – காலத்தை பொறுத்து ஏற்படும் மாற்றம் சீரற்றதாக இருத்தல்**

**எதிர் முடுக்கம் – காலத்தை பொருத்து திசைவேகம் குறைதல்**

**சீரான முடுக்கம் – காலத்தை பொறுத்து ஏற்படும் மாற்றம் சீராக இருத்தல்**

16) 1. ஆமையின் வேகம் 0.1 மீ/வினாடி

2. மனித நடையின் வேகம் 14 மீ/வினாடி

3. சிறுத்தை ஓடும் வேகம் 14 மீ/வினாடி

4. பயணிகள் விமானத்தின் வேகம் 180 மீ/வினாடி

A) 1 3 4 சரி

**B) 1 2 4 சரி**

C) 1 4 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: ஆமையின் வேகம் 0.1 மீ/வினாடி**

**மனித நடையின் வேகம் 14 மீ/வினாடி**

**சிறுத்தை ஓடும் வேகம் 31 மீ/வினாடி**

**பயணிகள் விமானத்தின் வேகம் 180 மீ/வினாடி**

17) ஒரு சிறுவன் குடை இராட்டினத்தில் 10மீ/வினாடி என்ற மாறாத வேகத்தில் சுற்றிவருகிறான். இக்கூற்றிலிருந்து நாம் அறிவது என்ன?

A) சிறுவன் ஒய்வு நிலையில் உள்ளான்.

B) சிறுவனின் இயக்கம் முடுக்கப்படாத இயக்கமாகும்.

C) சிறுவனின் இயக்கம் முடுக்கப்பட்ட இயக்கமாகும்.

**D) சிறுவன் மாறாத திசைவேகத்தில் இயங்குகிறான்.**

**விளக்கம்: மேற்கண்ட கூற்றிலிருந்து சிறுவனானவன் மாறாத திசைவேகத்தில் இயங்குகிறான் என்பது தெளிவாகிறது.**

18) ஒரு பொருளின் சமநிலையை அதிகரிக்க பின்வருவனவற்றில் எம்முறையினை பின்பற்றலாம்?

**A) ஈர்ப்பு மையத்தின் உயரத்தினை குறைத்தல்**

B) ஈர்ப்பு மையத்தின் உயரத்தினை அதிகரித்தல்

C) பொருளின் உயரத்தினை அதிகரித்தல்

D) பொருளின் அடிப்பரப்பின் அகலத்தை குறைத்தல்

**விளக்கம்: ஒரு பொருளின் சமநிலையை அதிகரிக்க ஈர்ப்பு மையத்தின் உயரத்தினை குறைத்தலே சரியான முறையாகும்.**

19) வேகம் – காலத்தின் வரைபடத்தின் சாய்வு மதிப்பு எவ்வாறு அமைகிறது?

A) நேர் கோடாக

B) சாய்வாக

**C) படுக்கையாக**

D) எதிர்குறி மதிப்பு

**விளக்கம்: வேகம் – காலத்தின் வரைபடத்தின் சாய்வானது படுக்கையாக காணப்படுகிறது. வேகம் மாறிலியாக உள்ளதால் வரைபடம் படுக்கையாக காணப்டுகிறது.**

20) எந்த சமநிலையில் ஈர்ப்பு மையத்தின் நிலை மாற்றம் அடைவதில்லை?

A) உறுதிச்சமநிலை

B) உறுதியற்ற சமநிலை

**C) நடுநிலை சமநிலை**

D) ஈர்ப்பு மையத்தின் நடுமைய்யம்

**விளக்கம்: நடுநிலைச் சமநிலையில் ஈர்ப்பு மையத்தின் நிலை மாற்றம் அடைவதில்லை, இந்த நிலையில் பொருளினை நகர்த்தும் போதும் ஈர்ப்பு சமநிலையில் ஈர்ப்பு மையம் மாற்றம் அடைவதில்லை.**

21) 1. இடப்பெயர்ச்சி – நாட்

2. வெற்றிடத்தில் ஒளியின் திசைவேகம் – வடிவியல் மையம்

3. கப்பலின் வேகம் – மீட்டர்

4. ஒழுங்கான பொருள்களின் பரப்பு – அகலமான அடிப்பரப்பு

5. சமநிலை – சீரான திசைவேகம்

**A) 3 5 1 2 4**

B) 3 4 5 1 2

C) 2 5 4 1 3

D) 3 5 2 4 1

**விளக்கம்: இடப்பெயர்ச்சி – மீட்டர்**

**வெற்றிடத்தில் ஒளியின் திசைவேகம் – சீரான திசைவேகம்**

**கப்பலின் வேகம் – நாட்**

**ஒழுங்கான பொருள்களின் பரப்பு – வடிவியல் மையம்**

**சமநிலை – அகலமான அடிப்பரப்பு**

22) 1. விழும் மழைத்துளியின் வேகம் – 14 மீ/வி

2.சைக்கிள் வேகம் – 5200 மீ/வி

3. ஓடும் பூனையின் வேகம் – 9-10 மீ/வி

4. ராக்கெட்டின் வேகம் – 20–25 கிமீ/மணி

A) 4 2 1 3

**B) 3 4 1 2**

C) 2 4 1 3

D) 1 4 2 3

**விளக்கம்: 1. விழும் மழைத்துளியின் வேகம் – 9–10 மீ/வி**

**2. சைக்கிள் வேகம் – 20–25 கிமீ/மணி**

**3. ஓடும் பூனையின் வேகம் – 14 மீ/வி**

**4. ராக்கெட்டின் வேகம் – 5200 மீ/வி**

winmeen.com